# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1982 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, சட்டவிலக்குரிமைச் சட்டம்

---

*[1982, மே மாதம் 20 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1982, மே மாதம் 21 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 20 | தபாற் செலவு : சதம் 50

# 1982 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, சட்டவிலக்குரிமைச் சட்டம்

[1982, மே மாதம் 20 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ 51/80
1495

1977 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 1 ஆந் தேதியிலிருந்து 1977 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆந் தேதி வரையிலான காலப்பகுதியில் நாட்டில் அகன்று பரந்த ஒழுங்கின்மையும் சட்டமின்மையும் நிலவியபோது, சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் நோக்கில் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படவுள்ள சிலவகைக்கான செயல்கள், கருமங்கள் தொடர்பில் குறித்த சில ஆட்களுக்கெதிராகச் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதனை மட்டுப்படுத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம், 1982 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, சட்டவிலக்குரிமைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

நல்லெண்ணத்துடன் செயலாற்றும் ஆட்களுக்கெதிராகச் சட்ட நடவடிக்கைகள் எடுப்பதன் மீதான மட்டுப்பாடுகள்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டு ஓகத்து மாதம் 1 ஆந் தேதியிலிருந்து 1977 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆந் தேதி வரையிலான காலப்பகுதியில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் நோக்கில் அமைச்சரொருவரால், பிரதி அமைச்சரொருவரால் அல்லது இலங்கை அரசாங்கத்தின்கீழ் பதவி வகிக்கும் அல்லது இலங்கை அரசாங்கத்தின் சேவையில் வேலைக்கமர்த்தப்பட்டிருக்கும் ஆளினால், கடற்படை, ஆயுதப்படை, வான்படை, பொலிசு அல்லது சிவில் என்னும் ஏதேனும் தகைமையிலாயினுஞ்சரி, அல்லது அமைச்சரொருவரின், பிரதி அமைச்சரொருவரின் அல்லது அவ்வாறு பதவிவகிக்கும் அல்லது அவ்வாறு வேலைக்கமர்த்தப்பட்டிருக்கும் ஆளொருவரினது பணிப்பொன்றின் அதிகாரத்தின் கீழ் நல்லெண்ணத்துடன் செயலாற்றும் எவரேனுமாளினால் ஏதேனும் செயல், கருமம் அல்லது விடயம், அது சட்டமுறையானதாகவிருப்பினுஞ்சரி அல்லது வேறு வகையானதாகவிருப்பினுஞ்சரி, நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டிருப்பின், அத்துடன் சட்டத்தையும் ஒழுங்கையும் வலுவுறுத்தற்கென அல்லது பொதுப் பாதுகாப்புக்கென அல்லது வேறுவகையில் பொதுநலன் கருதி அவரது கடமையை நிறைவேற்றுவதில் அச்செயல், கருமம் அல்லது விடயம் செய்யப்பட்டிருப்பின் அல்லது செய்யப்பட்டுள்ளதெனக் கொள்ளப்பட்டிருப்பின், அச்செயல், கருமம், அல்லது விடயம் சார்பாக அல்லது அச்செயல், கருமம் அல்லது விடயம் காரணமாக அல்லது அச்செயல், கருமம் அல்லது விடயம் தொடர்பில் வழக்கெதுவும் அல்லது வேறு சட்ட நடவடிக்கையெதுவும், அது குடியியல் சார்ந்ததாயினுஞ்சரி, அல்லது குற்றவியல் சார்ந்ததாயினுஞ்சரி எந்தச் சட்ட நீதிமன்றத்திலும் தொடரப்படுதலாகாதென்பதுடன், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னராயினும் அல்லது தொடங்கும் தேதிக்குப் பின்னராயினும் அத்தகைய ஏதேனும் வழக்கு அல்லது சட்ட நடவடிக்கையானது, ஏதேனும் சட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருப்பின், அத்தகைய ஒவ்வொரு வழக்கும் அல்லது சட்ட நடவடிக்கையும் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டதாகவும், வெற்றும் வெறிதானதாகவும் கருதப்படலும் வேண்டும்.

1—ஏ 62736 — 6,950 (82/03)

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்தச் சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.